Cr. No. 07/2021

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044301

1. District : KARUR மாவட்டம் | PS: V & AC காவல்நிலையம் | Year: 2021 ஆண்டு | FIR No.: 07/AC/2021 மு.த.அ. எண் | Date: 13/10/21 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended in 2018 | Sections பிரிவுகள்: 7, 7 r/w 12

   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : 12.10.21 நாள் முதல் | Date to : 13.10.21 நாள் வரை

   Time Period : நேர அளவு | Time from : 1745 hrs நேரம் முதல் | Time to : 0100 hrs நேரம் வரை

   (b) Information Received at PS. Date : 13.10.21 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | Time : 1030 hrs நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) 13.10.21 பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : 1030 hrs நேரம்

4. Type of Information : Written/ Oral : சியமாக

   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 7 km கிழக்கு

   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரம், எத்திசையில் : திருச்சி - கரூர் தேசிய நெடுஞ்சாலை

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address முகவரி : காந்திகிராமம் டபுள் வாட்டர் டேங்க் பஸ் ஸ்டாப் அருகில் மற்றும் தமிழ்நாடு மாநில வாணிபகழகம், தொழிற் பேட்டை

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : | District :

   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. நடராஜன்

   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்

   (b) Father's/ Husband's Name : P. முத்துசாமி

   தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : 1972 நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : இந்தியன் நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் காவல் துணைக் கண்காணிப்பாளர் | (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கரூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)

   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முறையான விவரங்கள் தேவைப்படின் தனித்தாள் இணைக்கவும்

   (1) திரு. C. இரவிச்சந்திரன் த/பெ. சின்னையா, மாவட்ட மேலாளர் / துணை ஆட்சியர் தமிழ்நாடு மாநில வாணிப கழகம் கரூர்

   (2) திரு. V. ராமலிங்கம் த/பெ. வடிவேல், கடை மேற்பார்வையாளர் அரசு மதுபான சில்லறை விற்பனைக்கடை, வெள்ளியணை

   (3) T. சுரிநாதன் த/பெ. திருவேங்கடம் எண் 2898/2 சிதக் 4 வது வீதி புதுக்கோட்டை (தனி நபர்)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:

   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
Vide form. No. 91 Seperatly Enclosed

10. Total value of properties stolen / involved : Rs. 62,000/-
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: –
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்து இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

சியமாக

[signature] 13/10/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

M. நடராஜன்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
13/10/21 at 1330hrs

Name: பெயர் ..............................
Rank நிலை காவல் ஆய்வாளர் No. எண் சிறப்பு
உ.கு.க. பிரிவு, கரூர்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.7/AC/2021 u/s 7, 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018.**

சமர்ப்பிக்கப்படுகிறது :

கரூர் மாவட்டம், தமிழ்நாடு மாநில வாணிப கழகம், மாவட்ட மேலாளர்/துணை ஆட்சியர் திரு.சி.ரவிச்சந்திரன் என்பவர், கரூர் மாவட்டத்தில் அமைந்துள்ள அவருடைய கட்டுப்பாட்டில் இருந்துவரும் தமிழ்நாடு அரசு மதுபான சில்லறை விற்பனை கடைகளுக்கு ஆய்வுக்கு செல்லும்போது, அந்தந்த கடை மேற்பார்வையாளர்/விற்பனையாளர்களிடம் மாத மாமூல் மற்றும் ஆய்வுக்கு என சொல்லி லஞ்சமாக பணம் பெற்று வருவதாகவும், அதை அவர் வெள்ளியணை அரசு மதுபான சில்லறை விற்பனை கடை மேற்பார்வையாளர் திரு.ராமலிங்கம் மூலமாகவும் மற்றும் அவரால் தனியாக வேலைக்கு வைத்துக்கொண்ட டிரைவர் திரு.சபரிநாதன் என்பவர் உதவியுடனும் பெறுவதாகவும், அதை அவர் பயன்படுத்திவரும் TN 50 Y 7552 என்ற ஹூண்டாய் வெர்னா காரில் சென்று செய்துவருவதாகவும், நம்பத்தகுந்த தகவல் கிடைத்தது. அதை முன்தகவலாளர்கள் மூலம் உறுதி செய்துகொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் ஊழல் தடுப்பு இயக்குநரக முன்அனுமதி பெற்று 12.10.2021-ந்தேதி மாலை சுமார் 5.30 மணிக்கு நான், சாட்சிகள் (1)திரு.எ.சந்தானகண்ணன், இளமின் பொறியாளர், இயக்கலும் காத்தலும், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், மண்மங்கலம், கரூர் மாவட்டம், (2)திருமதி.எஸ்.முத்துலெட்சுமி, இருக்கை பணி கண்காணிப்பாளர், மாவட்ட கல்வி அலுவலகம், கரூர் ஆகியோர் முன்னிலையில் காவலர் குழுவினருடன் திடீர் சோதனை செய்ய புறப்பட்டு கரூர் டாஸ்மாக் மேலாளர் அலுவலகம் அமைந்துள்ள தொழிற்பேட்டை வளாகத்திற்கு வந்தபோது, அவர் திருச்சியிலிருந்து கரூர் செல்லும் தேசியநெடுஞ்சாலையில் காந்தி கிராமம் டபுள் வாட்டர் டேங்க் பஸ்ஸ்டாப் அருகில் இருப்பதாக தெரியவந்தது. எனவே அந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது, மேற்படி பஸ்ஸ்டாப் அருகில் TN 50 Y 7552 என்ற ஹூண்டாய் வெர்னா கார் இடதுபுறமாக கரூர் நோக்கி நின்று கொண்டிருந்தது.

மாலை சுமார் 5.45 மணிக்கு தமிழ்நாடு மாநில வாணிப கழகம், மாவட்ட மேலாளர்/துணை ஆட்சியர் திரு.சி.ரவிச்சந்திரன் அவர்களும், அவரது டிரைவர் திரு.சபரிநாதன் என்பவரும் காருக்கு பின்னால் இருந்து காரை நோக்கி வந்தார்கள். அவர்கள் காரில் ஏறி உட்கார்ந்தவுடன், நான் அவர்களிடம் என்னையும், என்னுடன் இருந்த சாட்சிகளையும் அறிமுகம் செய்து கொண்டேன். அப்போது திரு.சி.ரவிச்சந்திரன் சற்று

13/10/21

பதட்டமடைந்தார். இருவரிடமும் வண்டியை எடுக்கவேண்டாம் என்று கேட்டுக் கொண்டு, வண்டியில் உட்கார வைத்தவாறே, மேலாளர் திரு.ரவிச்சந்திரனிடம் என்னென்ன வைத்துள்ளீர்கள் என்று நான் கேட்டபோது, அவர், அவரது வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து மடித்த நிலையில் வைத்திருந்த ஒரு காக்கி நிற கவரை எடுத்து, மடிப்பை பிரித்து கவரினை குறுக்குவாக்கில் கிழித்து உள்ளே இருந்து கத்தையாக 500 ரூபாய் நோட்டுக்களை எடுத்தார். அதில் எவ்வளவு உள்ளது என்று கேட்டபோது, தெரியாது என்று சொல்லி 500 ரூபாய் நோட்டுக்களாக இருந்த 50 ஐநூறு ரூபாய் நோட்டுக்களை எண்ணி காண்பித்து மொத்தம் ரூ.25,000/- இருப்பதாக சொன்னார். அந்த பணம் Kals distilleries company சேல்ஸ் ரெப்ரசென்டேடிவ் திரு.ஜெகன்பாரதியும், அவருடன் வந்த கிருஷ்ணமூர்த்தியும் தனக்கு கொடுத்ததாக தெரிவித்தார். மேலும் பணம் பற்றி முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்தார்.

அந்த சமயத்தில், அந்த இடம் போக்குவரத்து நெரிசலாகவும், விசாரணைக்கு ஏதுவாக இல்லாததால் அந்த இடத்திலிருந்து மேற்படி காருடன் இருவரையும் அழைத்துக் கொண்டு தொழிற்பேட்டையிலிருந்த மாவட்ட மேலாளர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 6.30 மணிக்கு பார்ட்டியுடன் வந்துசேர்ந்தேன். அலுவலக அறைக்குள் வந்தபோது, அங்கு திரு.இராமலிங்கம், சேல்ஸ்மேன் அறையினுள்ளே இருந்தார். மற்ற அலுவலக பணியாளர்கள் அவரவர் இருக்கையில் இருந்து வீட்டிற்கு கிளம்ப தயாராகி கொண்டிருந்தார்கள். மாவட்ட மேலாளர் திரு.ரவிச்சந்திரன் அவர்களிடம் இருந்த பணத்தை பற்றி மீண்டும் கேட்டபோது, அவர் ஏற்கனவே சொன்ன விளக்கத்தினையே மாறிமாறி சொன்னார். அதன் அடிப்படையில் திரு.ஜெகன்பாரதி அவர்களின் செல்போன் எண்.9843122122-ஐ அவரிடமே பெற்று, அந்த எண்ணிற்கு தொடர்பு கொள்ள முயற்சித்தபோது, அவர் பதிலளிக்கவில்லை. மேலும் அவருடன் வந்த திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவரின் 9500625796 என்ற செல்போன் எண்ணையும் மேலாளரிடம் பெற்று, அவரையும் தொடர்பு கொண்டபோது, அவரும் அழைப்பை ஏற்கவில்லை. எனவே, மேலேகண்ட இந்த தொகை ரூ.25,000/- மேலாளர் திரு.ரவிச்சந்திரன் அவர்களால் கையூட்டாக பெற்றிருக்கலாம் என்ற நம்பத்தகுந்த காரணம் இருந்ததால், மேற்படி தொகை முழுவதும் விசாரணைக்காக மேற்படி காக்கிநிற கவருடன் கைப்பற்றப்பட்டது.

மேலும், திரு.ரவிச்சந்திரன் அவர்களிடம் விசாரித்தபோது, அவர் தான் இன்ஸ்பெக்சன் செல்லும் இடங்களில் அன்பளிப்பாக கொடுக்கும் தொகைகளை வெள்ளியணை சூப்பர்வைசர் திரு.ராமலிங்கம் பெறுவாரா என தெரியாது என்றும், ஆனால் தன் டிரைவர் திரு.சபரிநாதனிடம் அந்த பணம் இருப்பதால் அவர் அவ்வப்போது உணவு மற்றும் டீசல் செலவுகளை

13/10/21

செய்துகொள்வார் என்றும், அதனால் தனிப்பட்ட முறையில் தான் செலவுக்கு பாக்கெட்டில் பணம் வைத்திருப்பதில்லை என்றும் சொன்னார். டிரைவர் திரு.சபரிநாதன் தனது ஊரைச்சேர்ந்தவர் என்றும், தன்னுடைய காருக்கு ஓட்டுநராக மாதம் ரூ.9000/- சம்பளத்திற்கு வைத்திருப்பதாகவும், தான் தங்கியிருக்கும் இடத்திலேயே தங்க வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். இதுசம்பந்தமாக திரு.ரவிச்சந்திரன் அவர்களிடம் விரிவான வாக்குமூலம் பெறப்பட்டது.

இதனைத்தொடர்ந்து திரு.சபரிநாதன் டிரைவரிடம் விசாரித்தபோது, அவர், அவருடைய வலதுபக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்து 3 ஐநூறு ரூபாய் கத்தைகளை ஆஜர் செய்து, அதில் எவ்வளவு தொகை உள்ளது என்று தனக்கு தெரியாது என்றும், அதை தனக்கு அவ்வப்போது திரு.ராமலிங்கம் கொடுத்ததாகவும் சொன்னார். மேலும், அவர்வசம் சட்டைப்பாக்கெட்டிலிருந்து இரண்டு 100 ரூபாய் மற்றும் ஒரு பத்து ரூபாய் அடங்கிய ரூ.210/-ஐ ஆஜர் செய்து, அவரது சொந்த பணம் என்று தெரிவித்தார். அவரது சொந்த தொகையை அவரிடமே திருப்பி கொடுத்துவிட்டு, 3 ஐநூறு ரூபாய் கத்தைகளை பிரித்து எண்ணி பார்த்தபோது, அதில் ரூ.4000/-, ரூ.7000/- மற்றும் ரூ.5000/- ஆக மொத்தம் ரூ.16,000/-ம் ஐநூறு ரூபாய் நோட்டுக்களாக இருந்தது. மேற்படி தொகைகள் மொத்தம் ரூ.16,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திரு.சபரிநாதன், தான் செய்யும் ஓட்டுநர் வேலைக்கு மாதம் ரூ.9000/- சம்பளமாக மாவட்ட மேலாளர் திரு.ரவிச்சந்திரன் அவர்கள் கொடுப்பதாக தெரிவித்தார். மேலும் தான், அவருடனேயே புலியூரில் உள்ள ஒரு வீட்டில் தங்கியிருப்பதாக சொன்னார். இதுகுறித்து அவரிடம் ஒரு விரிவான வாக்குமூலம் பெறப்பட்டது.

அலுவலகத்திலிருந்த திரு.ராமலிங்கம் என்பவரை விசாரித்தபோது, அவர் வெள்ளியணை அரசு மதுபான சில்லறை விற்பனை கடை எண்.5030ல் சூப்பர்வைசராக பணிபுரிந்துவருவதாகவும், மாவட்ட மேலாளர் திரு.ரவிச்சந்திரன் அவர்கள் ஆய்வுக்குப்போகும்போது, தான் அவருடன் உதவிக்கு செல்வது வழக்கம் என்றும், அவர் அறிவுரைப்படி அந்தந்த கடைகளில் கொடுக்கும் மாமூல் தொகை மற்றும் இன்ஸ்பெக்சன் அன்பளிப்பு தொகைகளை வசூல் செய்து, அன்றைய செலவுபோக மீதமுள்ள தொகைகளை டிரைவர் திரு.சபரிநாதன் மூலம் மேலாளர் திரு.ரவிசந்திரனுக்கு கொடுத்துவிடுவேன் என்றும், தவறும்பட்சத்தில் மறுநாள் கொடுத்துவிடுவேன் என்றும் சொன்னார்.

அதன்படி இன்று தனது கடை உட்பட மொத்தம் 3 கடைகளுக்கு ஆய்வுக்குச் சென்றுவிட்டு மாலை சுமார் 4.30 மணிக்கு மாவட்ட மேலாளருடன் அலுவலகத்திற்கு

வந்ததாகவும், அலுவலகத்தில் குறைதீர்க்கும் நாளுக்கு சில டாஸ்மாக் கடைகளிலிருந்து ஊழியர்கள் வந்திருந்ததாகவும், அதனால் ஆங்காங்கு வசூல் செய்த தொகைகளில் எவ்வளவு தொகையினை டிரைவரிடம் கொடுத்தேன் என்றும், மீதி எவ்வளவு வைத்திருந்தேன் என்றும் சரியாக நினைவு இல்லை என்று சொன்னார். அப்போது அவர்வசம் அவருடைய பேண்ட் பின் பாக்கெட்டிலிருந்து கருப்புநிற மணிபர்சை திறந்து காண்பித்து, அதிலிருந்து 500, 200, 100, 50, 20, 10 ரூபாய் நோட்டுக்களை ஆஜர் செய்து, எண்ணி காண்பித்து அதில் மொத்தம் ரூ.4680/- உள்ளது என்றும், அது தனது சொந்தபணம் என தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.4680/- திருப்பி அவரிடமே கொடுக்கப்பட்டது. பின்னர் அவர் தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து 500 ரூபாய் நோட்டுகளாக ஒரு கத்தை பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் மொத்தம் ரூ.11,000/- இருந்தது. மேலும் இடதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து 500 ரூபாய் நோட்டுக்களாக ஒரு கத்தையாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அவர் ஆஜர் செய்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது, அதில் ரூ.10,000/-மும் ஆக மொத்தம் ரூ.21,000/- இருந்தது. அந்த பணம் ரூ.21,000/- பற்றி கேட்டபோது, அது மாவட்ட மேலாளர் திரு.ரவிச்சந்திரன் அவர்களுக்காக வாங்கி அவரிடம் கொடுக்க வைத்திருந்த மாத மாமூல் பணம் என்று சொன்னார். மேலும் இடதுபாக்கெட்டில் 12.10.21 தேதியிட்ட சண்முகா மெஸ் கேஸ் பில் ரூ.765/-க்கானது ஒன்றும் இருந்தது. அதைப்பற்றி விசாரித்தபோது, இன்று மதியம் மேலாளருடன் ஆய்வுக்கு சென்றபோது, தானும், மேலாளரும், டிரைவரும், டைப் அடிக்க வந்த எலைட் கடையில் வேலை செய்யும் அதாவது கடை எண்.4928-ன் சூப்பர்வைசர் திரு.செல்வம் என்பவரும் சாப்பிட்ட பில் என்று சொன்னார். மேற்படி தொகைகள் மொத்தம் ரூ.21,000/- மற்றும் சண்முகா மெஸ் கேஸ் பில் 2 பக்கங்கள் அடங்கியது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதுகுறித்து திரு.ராமலிங்கத்திடம் ஒரு விரிவான வாக்குமூலம் பெறப்பட்டது.

இந்த நடவடிக்கையின்போது, மேலாளர் அலுவலகத்தில் ஆஜரிலிருந்த அலுவலர்களிடம் காணப்பட்ட தொகை விபரங்களை பதிவு செய்து கொண்டு, அவரவர்களிடமிருந்த பணம், அவரவர்களின் சொந்த பணம் என தெரியவந்ததால், அதை விசாரணைக்கு பிறகு திரும்ப அவரவர்களிடமே கொடுக்கப்பட்டது. மேலும், இந்த நடவடிக்கையின்போது அலுவலகத்திலிருந்து (1)தமிழ்நாடு மாநில வாணிப கழகம், மாவட்ட மேலாளர்/துணை ஆட்சியர் அலுவலக வருகைப்பதிவேடு-2021 முதல் பக்கம் மற்றும் அக்டோபர் மாதத்தின் சான்றொப்பமிட்ட நகல் (உதவி மேலாளர் சில்லறை விற்பனை திரு.ப.சக்திவேல் அவர்களால்

சான்றளிக்கப்பட்டது), (2)டிரைவர் திரு.சபரிநாதன் கைப்பட வண்டி சம்பந்தப்பட்ட குறிப்புகள் எழுதப்பட்ட 2021 டைரி அதில் பக்கம் 40ல் அதாவது பிப்ரவரி 2 தேதியிட்டதில் 12.10.21 தேதியிட்டு ஆய்வு சம்மந்தமாக சென்ற இடங்களைப்பற்றி குறிப்புகள் எழுதப்பட்டது மற்றும் (3)12.10.21 தேதியன்று பிசிகல் வெரிபிகேசன் செய்யப்பட்ட டாஸ்மாக் கடை எண்கள்.5030, 5026, 5025 ஆகியவைகளுக்கான படிவங்கள் மற்றும் அறிக்கைகள் திரு.ராமலிங்கத்தால் எழுதப்பட்டது மற்றும் ந.க.சி.வி.4/204/2020, நாள்.12.10.2021 கடிதம் ஆகிய ஆவணங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேலும், அலுவலகத்தில் படைவீரர் கொடிநாள் நிதி சம்பந்தப்பட்ட விபரங்களை திரு.இராஜேந்திரன், இளநிலை உதவியாளர் மற்றும் திரு.செல்வக்குமார், இளநிலை உதவியாளர் ஆகியோர்கள் மூலம் சரிபார்த்து அவைகளை தொடர் நடவடிக்கைக்காக மீண்டும் அவர்கள் வசமே ஒப்படைக்கப்பட்டது.

கரூர் மாவட்டம், தமிழ்நாடு மாநில வாணிப கழகம், மாவட்ட மேலாளர்/துணை ஆட்சியர் திரு.சி.ரவிச்சந்திரன் மற்றும் வெள்ளியணை அரசு மதுபான சில்லறை விற்பனை கடை மேற்பார்வையாளர் திரு.ராமலிங்கம் ஆகியோர்களின் மேற்படி செயல்களானது u/s 7 of PC Act, 1988 as amended in 2018-ன்படி வழக்கு பதிவு செய்ய போதிய முகாந்திரம் உள்ள செயல்களாகும். இதேபோல், திரு.ரவிசந்திரன் அவர்களால் தனியாக வேலைக்கு வைக்கப்பட்ட தனிநபர் டிரைவர் திரு.சபரிநாதன் அவர்களின் மேற்படி செயல்களானது u/s 7 r/w 12 of PC Act, 1988 as amended in 2018-ன்படி வழக்கு பதிவு செய்ய போதிய முகாந்திரம் உள்ள செயல்களாகும்.

சோதனை நடவடிக்கைகள் முழுவதும், அரசு விதிமுறைகளின்படி சமூக இடைவெளியை கடைபிடித்தும், அவ்வப்போது கிருமி நாசினி கொண்டு அனைவர் கைகளை சுத்தம் செய்தும், முககவசம் அணிந்தும் மேற்கொள்ளப்பட்டது. திடீர் சோதனை தொடர்பான இதர விபரங்கள் 12.10.2021 தேதி மாலை 6.45 மணி முதல் நள்ளிரவு 1.00 மணிவரை தயார் செய்யப்பட்ட எனது நடவடிக்கைகளில் விரிவாக கூறப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி நிகழ்வுகள் தொடர்பாக புலன் விசாரணை செய்யும் பொருட்டு, Karur V&AC Cr.No.7/AC/2021 u/s 7, 7 r/w 12 of Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி கரூர் மாவட்டம், தமிழ்நாடு மாநில வாணிப கழகம், மாவட்ட மேலாளர்/துணை ஆட்சியர் திரு.சி.ரவிச்சந்திரன், வெள்ளியணை அரசு மதுபான சில்லறை விற்பனை கடை மேற்பார்வையாளர் திரு.பி.வி.ராமலிங்கம் மற்றும் திரு.சி.ரவிசந்திரன்

அவர்களால் தனியாக வேலைக்கு வைக்கப்பட்ட தனிநபர் டிரைவர் திரு.டீ.சபரிநாதன் ஆகியோர்கள்மீது இன்று 13.10.2021ஆம் தேதி காலை 10.30 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக வாய்மொழி அனுமதி பெற்று வழக்கு பதிவு செய்கிறேன்.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் திடீர் சோதனை நடவடிக்கைகள் ஆகியவற்றை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி, கரூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது. இதர நகல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

13/10/21

(எம்.நடராஜன்),
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கரூர்.